# இந்தியப் பெருங்கடலில் சீன ஆதிக்கம்:

# யதார்த்தத்தைப் புரிந்துகொள்வோம்

இந்தியாவின் தெற்குப் பகுதி என்பது மிக மிக முக்கியமான பகுதி. இது பாதுகாப்புரீதியாகவும் வணிகரீதியாகவும் இந்தியாவுக்கு மிக முக்கியமானது.

சீனா இந்துமகா சமுத்திரத்தில் தலை காட்டுவது குறித்துப் பலரும் கவலை தெரிவித்துவருகிறார்கள். நான் அது குறித்து என் சமூக வலைதளத்தில் பதிவிட்டிருக்கிறேன். அதைப் படிக்கும் பலர் இதில் என்ன இருக்கின்றது என்று கிண்டலடித்தனர். நம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளின் உண்மையான பொருளைப் புரிந்துகொள்ளாமலும் தொலைநோக்கில் அவற்றால் எழக்கூடிய அபாயங்களைப் பற்றிய விழிப்புணர்வு இல்லாமலும் இருப்பதன் அடையாளம்தான் இது.

ஹம்பன் தோட்டாவை இலங்கை 99 வருடத்திற்குக் குத்தகைக்கு எடுத்திருப்பது சரிதான். சீனா இந்து மகா சமுத்திரத்தில் குடி கொள்ளப் பட்டு வழிச் சாலையை (silk way) அமைத்து வருகிறது. ஆப்பிரிக்க, தென் அமெரிக்க நாடுகளுக்குத் தனது வியாபாரத்தைப் பெருக்குவதற்காக அந்த வேலையைச் செய்கிறது. இவற்றையெல்லாம் நாம் அப்படியே நம்பிவிடக் கூடாது. மேற்பரப்பில் நடப்பதை மட்டும் பார்க்காமல், நிகழ்வுகளை ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும். அமைதியாக இருக்கிறேன், நட்புறவு பேசுகிறேன் என்று சொல்லிக் கொண்டே சீனா நம் மீது போர் தொடுத்ததையெல்லாம் நீங்கள் கவனிக்கவில்லையா?

இந்து மகா சமுத்திரத்திற்குள் சீனா வந்தால் நமக்கு என்ன? நாம் ஏன் அதைப் பற்றிப் பேச வேண்டும் என்று பல நண்பர்கள் கேட்கிறார்கள். படித்த புத்திசாலியான நண்பர்கள் கூட அபத்தமாகப் பேசிக் கொண்ருக்கிறார்கள். சீனா வடகிழக்கில் லடாக் பகுதியில் என்ன செய்கிறது என்று பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். அதே போக்கினைத் தெற்கிலும் சீனா காட்டாது என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது எனச் சற்றுச் சிந்தியுங்கள்.

**தென்னகத்தின் முக்கியத்துவம்**

இந்தியாவின் தெற்குப் பகுதி என்பது மிக மிக முக்கியமான பகுதி. இது பாதுகாப்புரீதியாகவும் வணிகரீதியாகவும் இந்தியாவுக்கு மிக முக்கியமானது. கீழே உள்ள பட்டியலைப் பாருங்கள்:

1) கூடங்குளம் அணுமின் நிலையம் திருநெல்வேலி மாவட்டத்தின் தென்கோடியில் இருக்கிறது.

2) ஐஎன்எஸ் கட்ட பொம்மன் என்னும் பெயர் கொண்ட இந்தியக் கடற்படைத் தளம் நெல்லை மாவட்டத்தில் நாங்குநேரி அருகே 300 ஏக்கர் பரப்பில் உள்ளது.

3) மகேந்திரகிரி இஸ்ரோ வளாகம் திருநெல்வேலி மாவட்டத்தில். அமைந்துள்ளது. ராக்கெட் செலுத்துவதற்கான மூலப்பொருட்கள் இங்கிருந்துதான் செல்கின்றன.

4) குலசேகரப்பட்டினம் ராக்கெட் ஏவுதளமும் வரப்போகிறது. அதுவும் தூத்துக்குடி மாவட்டம் கடற்கரையோரம் குலசேகரபட்டினத்தில் அமைய உள்ளது.

5) தூத்துக்குடி துறைமுகம்.

6) மணப்பாடு, முட்டம், குளச்சல், தேங்காய் பட்டணம் மீன் பிடி துறைமுகங்கள் இங்கே உள்ளன.

7) குமரி மாவட்டம் மணவாளக் குறிச்சியில் அரிய மணல் நிறுவனமும் இருக்கின்றது. அதில் கதிரியக்கத் தாதுமணலைப் பிரித்தெடுக்கும் சென்சிட்டிவான ஆலையும் குமரி மாவட்டத்தில் உள்ளது.

இவற்றைத் தவிர, கேரளாவில் கொச்சி துறைமுகம், தும்பா ராக்கெட் எனப் பல முக்கியமான மையங்கள் தெற்கில் உள்ளன.

இந்தியாவின் கடல் வழிப் போக்குவரத்து தென் மாநிலங்களில்தான் நடக்கிறது.

**காலத்தின் கட்டாயம்**

இப்படியான விஷயங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, இப்படியான சிக்கல்களை எல்லாம் மனதில் வைத்துக் கொண்டுதான் இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீனாவின் ஆதிக்கத்தைப் பார்க்க வேண்டியிருக்கிறது. நம்முடைய பாதுகாப்புக்கான முன்னேற்பாடாகத்தான் இந்து மகா சமுத்திரத்தில் சீன ஆதிக்கம் ஏற்படக் கூடாது என்று சொல்கிறோம். இது காலத்தின் கட்டாயம்.

இதைப் புரிந்துகொண்டவர்கள் கிண்டல் அடிக்க மாட்டார்கள். உலக அரசியலைப் புரிந்துகொண்டவர்கள் இதிலுள்ள உண்மைகளை உணர்வார்கள். இது காரண - காரிய அடிப்படையில் அமைந்த வாதமா என்று பார்த்து அதை விமர்சிக்க வேண்டும்.

நாட்டின் பாதுகாப்பிற்காகவே இந்து மகாசமுத்திரம் பற்றிக் கவலைப்படுகிறோம். தென்மண்டலத்தில் எதிர்காலத்தில் சிக்கல் வரக் கூடாது. குலசேகரப்பட்டினத்தில் ராக்கெட் நிலையம் பாதுகாப்பாக இருக்க வேண்டும். கூடங்குளம் பாதுகாப்பாக இருக்க வேண்டும். குமரி மாவட்டத்தில். தாதுமணல் நிலையம் பாதுகாப்பாக இயங்க வேண்டும். ஐ.என்.எஸ் கட்டபொம்மன் என்ற இந்தியக் கடற்படைத் தளம் பாதுகாப்பாக இருக்க வேண்டும். மகேந்திர இஸ்ரோ வளாகமும் பாதுகாப்பாக இருக்க வேண்டும். மேலும் கொச்சி துறைமுகம், திருவனந்தபுரத்தில் இருக்கும் தும்பா, இதெல்லாம் கவனிக்கப்பட வேண்டாமா?

இவற்றைத் தவிர, சேது சமுத்திரத் திட்டம், கச்சத்தீவு ஆகிய பிரச்னைகளும் இருக்கின்றன. அதையும் நாம் கவனிக்க வேண்டும்.

எல்லையில் நிலவும் யதார்த்தத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். சீனப் போர்க் கப்பல்கள் தொடர்ந்து இங்கு நடமாடி வருகின்றன. இந்தியாவின் பாதுகாப்புக்கும் வணிக வளத்திற்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய சூழல் இது. அமைதியே வடிவான இந்தியப் பெருங்கடல்

பகுதியின் அமைதியைச் சிதற அடிக்கக்கூடிய நிகழ்வுகளை முன்கூட்டியே உணர்ந்து எச்சரிக்கையாக இருக்க வேண்டியது மிக மிக அவசியம்.

**சமயம் தமிழ்** 08.07.2021